## சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை - கருணை அடிப்படை பணி நியமனம் - பணியாளர் தொகுதி (மறைந்த) திரு ஏ.சிவக்குமார் என்பவரின் மனைவி திருமதி கோ.சுமதி - இளநிலை உதவியாளர் பணியில் நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (ப.க.4(1))த் துறை

அரசாணை (1டி) எண்.220 நாள் 21.12.2023

திருவள்ளுவர் ஆண்டு 2054

சோபகிருது வருடம், மார்கழி 5

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த(எம்)த்துறை, நாள் 01.08.2018.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.50626/ஜே/இ4/2023, நாள் 26.09.2023.

**ஆணை**:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தருமபுரி மாவட்டம், சோமனஅள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆய்வக உதவியாளராகப் பணிபுரிந்த திரு ஏ.சிவக்குமார் என்பவர் 18.06.2015-ம் நாளன்று பணியிலிருக்கும் பொழுது இறந்துவிட்டார் எனவும், அவரது மனைவி திருமதி கோ.சுமதி என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்க கோரியுள்ளதன் தொடர்ச்சியாக, கருணை அடிப்படை பணி நியமனத்திற்கான அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளதன் அடிப்படையில், அன்னார், தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார் என்றும் தெரிவித்து *தனியரின் பணியினை 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர்* பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறத் தேவையில்லை என்பதால்,

தருமபுரி மாவட்டம், சோமனஅள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆய்வக உதவியாளராகப் பணிபுரிந்த திரு ஏ.சிவக்குமார் என்பவரின் மனைவி திருமதி கோ.சுமதி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிபுரிந்து வரும் நிலையில், அன்னாரது பணியினை அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்யலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதும் இருப்பின், அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
(பணிப்பதிவேடு மற்றும் அசல் ஆவணம்)
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக).
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.